

முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர், அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் கமுதி வடக்கு ஒன்றியத்தில் கிளா மரத்துப்பட்டி, கோரப்பள்ளம், இராமசாமிப்பட்டி கிராமங்களில் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் வி வாசுதேவன் , மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் பெருநாழி போஸ், பாரதிதாசன் உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதுரை வடக்கு தொகுதி கழக வேட்பாளர், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசனுடன் தொகுதிக்குட்பட்ட நரிமேடு பகுதி முல்லைநகர், சொக்கநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ஏ.கே.ஆறுமுகம், ரவீந்திரன், பி.டி.மணிமாறன், சரவணன் அம்பலம், புண்ணியமூர்த்தி, குரும்பன், ராதாகிருஷ்ணன், அறிவுநிதி, உசிலை கணேசன், பொன் சேது ராமலிங்கம், காவேரி சொக்கலிங்கம், ராஜேஷ் என்ற பாக்யராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.




திண்டுக்கல் ஒன்றியம் வடக்கு மாலப்பட்டி பகுதியில் பிரச்சாரத்தின் போது திண்டுக்கல் மேற்கு எம்ஜிஆர் மன்ற ஒன்றிய துணைச் செயலாளர் பதவியில் இருந்த கணேசன் தலைமையில் 70 பேர் அ.தி.மு.க.விலிருந்து விலகி கழகத்தில் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் இ.பெ. செந்தில்குமார் முன்னிலையில்தங்களை இணைத்துக் கொண்டனர். ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி வி.சி.க. வேட்பாளர் சக்திவேலுக்கு தேனி உழவர் சந்தையில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. பானை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார் உடன் சரவணக் குமார் எம்.எல்.ஏ. நகர செயலாளர்கள் நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் செல்வம் மற்றும் கழக முன்னோடிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி தி.மு.க. சார்பில் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் தூத்துக்குடி மத்திய ஒன்றியம் தெற்கு சிலுக்கன் பட்டி ஊராட்சி பகுதியில் வெற்றி சின்னமாம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் கே.கே.ஆர். ஜெயக்கொடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தூர் மணி, வழக்கறிஞர் பூம்குமார், மற்றும் கூட்டணி கட்சி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி அ.தி.மு.க. மற்றும் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கழக வேட்பாளர் எஸ்.டி.வீராசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். நிகழ்ச்சியில் ஜெக செல்வம் ,மனோ, ஜெயசூர்யா, விக்கி, டாக்டர் குணசேகரன் ஆகியோர் தலைமையில் மாற்றுக் கட்சி நிர்வாகிகள் இணைந்தனர். உடன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு தொகுதி ஜீவாநகர் பகுதியில் மதுரை முஸ்லிம் ஐக்கிய ஜமாத் ஆலோசனை கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கழக அரசின் சாதனை திட்டங்களை எடுத்துக் கூறி மேற்கு தொகுதி கழக வேட்பாளர் ரகுபாலாஜிக்கு ஆதரவாக உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் முபாரக் மந்திரி, எம்.எல்.ராஜ், துணை மேயர் நாகராஜன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் நல்லமணி, சிறுபான்மை அணி மீரா ஜான் உள்ளிட்ட கழகத்தினர், ஜமாத் நிர்வாகிகள், ஜமாத் அமைப்பினர் என திரளானோர் பங்கேற்றனர்,



மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி கழக வேட்பாளர், தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திருமங்கலம் நகர் பகுதியில் வார்டு வார்டாகச் சென்று பொது மக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் ஸ்ரீதர், லதா அதியமான், ரம்யா முத்துக்குமார், சின்னச்சாமி, டிஸ்க் அலாவுதீன், முத்துக்குமார், ஆதவன் அதியமான் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இராமநாதபுரம் சட்டப்பேரவை வேட்பாளர், மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் ரெகுநாதபுரம் முத்துப்பேட்டை நைனார்மறைக்கான் பெரிய பட்டணம் களிமண்குண்டு மேதலோடை, திணை குளம் ஆகிய ஊராட்சிகளில் கிராம மக்களிடம் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் உடன் வாக்கு சேகரித்தார்



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும்,சிறப்பான நிர்வாகத் திறமையை கருத்தில் கொண்டும் தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் டாக்டர்.கலை கதிரவனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் வடக்கு ஒன்றியம் பாலபத்திரராமபுரம் கிராம பகுதியில் இருந்து சுமார் 50 க்கும் மேற்பட்டஅ.தி.மு.க.அ.ம.மு.க.ஓ.பி.எஸ் அணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் அன்பழகன் ஏற்பாட்டில் தென்காசி தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் தெற்கு வே.ஜெயபாலன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.இந்த நிகழ்ச்சியில் தென்காசி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் பங்கேற்று கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்று கழக இரு வண்ண வேஷ்டியை வழங்கினார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தேர்தல் அலுவலகத்தில் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஆண்டிபட்டி கழக வேட்பாளர் மகாராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் வரவேற்புரை ஆற்றினார். தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், பேரூர் செயலாளர் சரவணன், தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அதிபன் ஆகியோர் உடன் இருந்தனர் .



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் தென்காசி நகராட்சி பகுதியில் இந்திய சுதந்திர போராட்ட வீரர் தியாகி அப்துல்ஸலாம் அவர்களின் நினைவுத்தூணிற்கு நகர செயலாளர் சாதிர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அப்பகுதிகளில் தெருத் தெருவாக சென்று கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி உதய சூரியன் சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.இதில் கழக நிர்வாகிகள்,கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.